செ.வெ. எண் :340 நாள்: 14.10.2020

**காஞ்சிபுரம் மாவட்டம் வடகிழக்கு பருவமழை 2020 முன்னெச்சரிக்கை ஏற்பாடாக குன்றத்தூர் வட்டம் அடையார் கால்வாய் தூர்வாரும் பணிகளை காஞ்சிபுரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ கூட்டுறவு சங்க பதிவாளர் முனைவர். இல. சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா. பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று ஆய்வு செய்தனர்.**

வடகிழக்கு பருவமழை துவங்க உள்ள நிலையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்று வரும் வெள்ள தடுப்பு பணிகளை காஞ்சிபுரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/கூட்டுறவு சங்க பதிவாளர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.10.2020) ஆதனூர் அடையாறு கால்வாய் ஆரம்ப நிலையத்திலிருந்து நடைபெற்றுவரும் தடுப்பணை பணிகளையும் மேலும் வரதராஜபுரம் மகாலட்சுமி நகர், அஷ்டலட்சுமி நகர், அட்டை தொழிற்சாலை பாலம், சோமங்கலம் உள்ளிட்ட பகுதிகளிலும் வெள்ள தடுப்பு, தடுப்பணை கட்டுதல் மற்றும் கால்வாய் சீரமைப்பு பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/கூட்டுறவு சங்க பதிவாளர் முனைவர்.இல. சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது...

வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி இந்த அடையாற்றின் ஒட்டியுள்ள பகுதிகளில் தண்ணீர் புகாத வண்ணம் அனைத்து வகையான முன்னேற்பாடுகளையும் செய்ய வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் அதன் அடிப்படையில் ஏற்கனவே நிறைய பணிகள் கடந்த ஆண்டு எடுக்கப்பட்டு ஏறக்குறைய 150 கோடிக்கு பல்வேறு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது தற்பொழுது முகத்துவாரம் வேலைகள் 6 கோடியில் நடைபெற்றுவருகிறது வரலாற்றில் 1.35 டிஎம்சி நீர் சேமிக்கப்படுகிறது அவ்வாறு நீர் சேமிக்கப்படுவதால் அடையாற்றில் ஏற்படும் வெள்ளம் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும் வரதராஜபுரம் அணைகளில் ரூ.12 கோடி நிதி மதிப்பீட்டில் முதற்கட்டமாக உபரிநீர் வடிவம் கொடுப்பதற்கு ரூ. 4.5 கோடி கொடுக்கப்பட்டுள்ளது அதன் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. ரூபி பில்டர்ஸ் முதல் அவுட்டர் ரிங்ரோடு வரை உள்ள பகுதிகளில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பல்வேறு நிதிகளை ஒருங்கிணைத்து தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னரே இப்பணிகள் முடிக்கப்பட்டு விடுவதன் மூலம் குடியிருப்புகளில் நீர் புகாத வண்ணம்

நடவடிக்கை எடுக்கப்படும் என காஞ்சிபுரம் கண்காணிப்பு அலுவலர்/கூட்டுறவு சங்க பதிவாளர் முனைவர்.இல. சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகம் மக்கள் நல்லுறவு மையம் கூட்ட அரங்கில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் வடகிழக்கு பருவமழை 2020 முன்னெச்சரிக்கை ஏற்பாடாக மாவட்டத்தில் நடைபெற்று வரும் பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திரு.டி. ஸ்ரீதர், ஸ்ரீபெரும்புதூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. திவ்யஸ்ரீ, நீர்வள மேலாண்மை திட்ட செயற்பொறியாளர் திரு. ரமேஷ், உதவி பொறியாளர் திரு. குஜராத் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் காஞ்சிபுரம்.**